யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020

தரம் - 12 (2021) | விவசாய விஞ்ஞானம் - 3

பெயர் / சுட்டெண் : ..... திரு.ர.யாழினி B.Sc (Hons), PGDE

அறிவுறுத்தல்கள் :

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

01) பயிர்த் தாவரம் ஒன்றின் முதிர் இலைகள் வளர்ச்சி குன்றியும் சிறிய ஊதா நிறப் பொட்டுக்கள் தோன்றியும் காணப்பட்டது. இப்பயிர் தாவரத்திற்கு ஏற்பட்ட போசணை மூலகப் பற்றாக்குறையை பூர்த்தி செய்ய இடவேண்டிய அசேதன வளமாக்கி

1) யூரியா 2) TSP 3) MOP
4) டொலமைட் 5) அமோனியம் சல்பேற்

02) களித்துணிக்கைகள் தொடர்பாக சரியான கூற்று

1) மண்ணில் காணப்படும் உயிர்ப்பற்ற அசேதன கூறு
2) மேற்பரப்பில் அதிகளவு மறையேற்றங்களை கொண்டிருப்பதால் மண் மாதிரியின் கற்றயன் பரிமாற்றுதிறனை அதிகரிக்கும்
3) 0.02mm இலும் குறைந்த விட்டமுடைய துணிக்கைகள்
4) களியின் அளவு மண் மாதிரியில் அதிகரிப்பின் மண் வளியூட்டம் அதிகரிக்கும்
5) களித் துணிக்கைகள் மண் மாதிரியில் அதிகரிப்பின் மண் கரடுமுரடான இழையமைப்பைப் பெறும்

03) மண் இறுக்கமடைதல் பற்றிய சில கூற்றுகளை கருதுக.

A - ஈர மண்ணின் மீது பாரமான வாகனங்களை நகர்த்தும் போது மண் இறுக்கமடையும்
B - தொடர்ச்சியான பயிர்ச்செய்கையால் மண் இறுக்கமடையும்
C - மண்ணில் சேதனப் பொருள் அளவு அதிகரிப்பதால் மண் இறுக்கமடையும்
D - மண்புழுவின் செயற்பாடு குறைவடைவதால் மண் இறுக்கமடையும்

சரியானவை

1) A, B, C 2) A, C, D 3) A, B,D 4) B, C, D 5) A, B, C, D

04) காற்றரிப்பால் பாதிக்கப்படும் பிரதேசத்திற்கு பொருத்தமான மண் காப்பு முறை

1) சமஉயரக் கோட்டு பயிர்ச்செய்கை 2) வைக்கோல் மூடுபடை
3) பனையோலை புதைத்தல் 4) ஜிப்சம் சேர்த்தல்
5) படிக்கட்டு பயிர்ச்செய்கை

05) இலங்கையில் வடபகுதி விவசாயிகள் தமது பெரும் போக பயிர்ச்செய்கைக்கு நம்பியிருக்கும் மழைவீழ்ச்சி வகைகள்

1) முதலாம் இடைப்பருவ மழை, தென்மேல் பருவப் பெயர்ச்சி மழை
2) வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை, முதலாம் இடைப்பருவ மழை
3) தென்மேல், வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை
4) இரண்டாம் இடைப்பருவ மழை, வடகீழ் பருவ மழை

www.ikedu.lk

5) இரண்டாம் இடைப்பருவ மழை, தென்மேல் பருவப் பெயர்ச்சி மழை

06) புவி வெப்பமடைதலில் அதிக பங்களிக்கும் வாயுக்கள்

1) O_2, CO_2 2) N_2, CO_2 3) CO_2, CH_4
4) O_2, H_2O 5) O_3, CH_4

07) மிக விரைவில் உக்கலடையக் கூடியதும் மண்ணிற்கு அதிக நைதரசனை வழங்கக் கூடியதும்

1) வைக்கோல் 2) மாட்டுச்சாணி 3) கோழி எச்சம்
4) சணல் 5) கிளிசறிடியா இலை

08) நுண் நீர்ப்பாசன முறை தொடர்பாக சரியானது,

1) சாய்வான அதிக காற்று வீசும் பிரதேசத்திற்கு பயன்படுத்த முடியாது.
2) பயிர்களின் வேர்கள் நன்கு பரந்து வளர்ந்து மண்ணை பற்றி பிடித்திருக்கும்
3) மண்மேற்பரப்பு ஆவியாதல் அதிகரித்து காணப்படும்
4) தாவர வேர்த்தொகுதி பிரதேசம் எப்போதும் வயற்கொள்ளளவு நிலையில் இருக்கும்
5) களை வளர்ச்சி துரிதமடையும்

09) மண்ணை வெட்டிப் புரட்டும் போது எதிர்பார்க்கக்கூடியது

1) மண் துளைத்தன்மை கூடும், நீர்வடிப்பு, நீர் பற்றும் திறன் குறையும்
2) மண் தோற்ற அடர்த்தி கூடும், துணிக்கை அடர்த்தி குறையும்
3) மண் தோற்ற அடர்த்தி குறையும், நீர் பற்றும் திறன் கூடும்
4) களை, பூச்சி பீடைத்தாக்கம் அதிகரிக்கும், நீர் பற்றும் திறன் குறையும்
5) மண் வளியூட்டம் அதிகரிக்கும், நீர் பற்றும் திறன் குறையும்

10) வளர்ச்சி சீராக்கிகளின் தொழிற்பாடுகள் தரப்பட்டுள்ளது.

A - முனையரும்புகளின் வளர்ச்சி
B - நீர்தகைப்பின் போது இலைவாய்கள் மூடச் செய்தல்
C - பாதகமான சூழலின் போது அங்குரத் தொகுதியை உறங்கு நிலையடையச் செய்தல்
D - வித்து உறங்கு நிலையை முடிவுக்கு கொண்டு வருதல்
E - வெட்டுப்படை உருவாக்குதல்
மேற்கூறப்பட்டுள்ளவற்றுள் அப்சிசிக் அமிலத்தின் தொழில்

1) A, B, C 2) B, C, D 3) A, C, D 4) B, C, E 5) C, D, E

11) தாவரங்களின் ஒளித்தொகுப்பு நடைபெறும் மென்சவ்வுகளின் சிறு பைகள் அழைக்கப்படுவது

1) தைலகோபிட் 2) மணியுருக்கள் 3) ஒளித் தண்டுகள்
4) போற்றன்கள் 5) இழைமணிகள்

12) மையநீக்கவிசை பம்பி ஒன்றை செயற்படுத்திய போது மோட்டார் தொழிற்படும் போது உட்புகு குளாய் மூலம் நீர்மேல் எழவில்லை. இதற்குக் காரணமாக இருக்கக் கூடியவை

A - நீர்ப்பம்பியினுள் வாயு சிறைப்பட்டிருத்தல்
B - அடி வால்விலிருந்து நீர் கசிதல்
C - சுழலித்தண்டு, கவசப் பகுதியில் நீர் கசிவு
D - உட்புகு குளாய் சாய்வாக காணப்படல்

1) A 2) B 3) C 4) A, B ,C 5) B, C, D

13) பயிராக்கவியல் முறை மட்காப்பு

1) சம உயரக்கோட்டு சால் 2) படிக்கட்டுகள்
3) சமஉயரக்கோடு வழியே பயன்படுத்தல் 4) கல்வேலி அமைத்தல்
5) கான்களின் சாய்வின் வழியே குழிகள் அமைத்தல்

14) காலநிலை காரணி - காலநிலை அளவீட்டு உபகரணச் சோடியில் தவறானது

1) சாரீரப்பதன் - சிட்சின் உயர்வு இழிவு வெப்பமானி

www.ked.lk

2) மழைவீட்சி செறிவு - தானியங்கி மழைமானி
3) வளியமுக்கம் - பாரமானி
4) மண் வெப்பநிலை - மண்வெப்பமாணி
5) ஒளிக்கால அளவு - சூரிய ஒளிர்வுமானி

15)

A - வடகீழ் பருவப் பெயர்ச்சி காற்று காரணமாக இலங்கையின் பல பாகங்கள் மழையை பெறுகிறது.

B - சூறாவளியின் செல்வாக்கும், மத்திய மலைநாட்டில் காணப்படும் மலைகளும் வடகீழ் பருவப் பெயர்ச்சி காற்றில் இருந்து மழை கிடைப்பதை உறுதி செய்கின்றது.

1) A சரி, B சரி
2) A சரி, B பிழை
3) A, B சரி, A மூலம் B விளக்கப்படுகிறது
4) A, B சரி B மூலம் A விளக்கப்படுகிறது
5) A, B பிழை

16) கறுவா, கரும்பு மற்றும் பூங்கனியியல் பயிர்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் அமைந்துள்ள பிரதேசங்களை முறையே கொண்டது,
1) மாத்தளை, அகலவத்தை, கன்னொருவை
2) கம்புறுபிட்டிய, உடவளவை, கன்னொருவை
3) அம்பலந்தொட்டை, மகாஇலுப்பள்ளம, மாத்தளை
4) கண்டி, உடவளவை, பண்டாரவளை
5) கம்புறுப்பிட்டிய, மாத்தளை, சீதாஎலிய

17) முதலான மண் கனிப்பொருட்களாவன,
1) குவாட்சும் கல்சயிற்றுமாகும்.
2) பெல்ஸ்பாரும் மொன்மொரிலினைற்றுமாகும்.
3) குவாட்சும் பெல்ஸ்பாருமாகும்.
4) கயோலினைற்றும் குவாட்சுமாகும்.
5) பெல்ஸ்பாரும் ஏமற்றைற்றுமாகும்.

18) தாவரங்களின் ஒளிக்காலத் தூண்டற்பேறு பற்றிய கூற்றுகள் சில வருமாறு.

A - தாவரங்களில் பூக்கள் உருவாதல், செந்நிற ஒளியை அகத்துறிஞ்சும் பைற்றோகுரோம் மூலமாகத் தூண்டப்படும்.

B - தாவரங்களில் பூக்கள் உருவாவதலைத் தூண்டுவதற்கென புளோரிஜன் எனும் நொதியம் தேவையாகும்.

C - தாவரங்களில் பூக்கள் உருவாதலை செயற்கையாகத் தூண்டுதல் ஒளிக்காலத் தூண்டற்பேறு எனப்படும்.

மேற்படி கூற்றுகளுள் உண்மையானது / உண்மையானவை

1) A மட்டும்.
2) B மட்டும்.
3) C மட்டும்.
4) A, B ஆகியன மட்டும்.
5) A, C ஆகியன மட்டும்.

19) மண்ணிற்கு ஜிப்சம் இடுதல்
1) மண்ணின் தோற்ற அடர்த்தியை அதிகரிப்பதற்கு
2) மண்ணின் கார தன்மையை அகற்றுவதற்கு
3) மண்ணின் அமிலத் தன்மையை அகற்றுவதற்கு
4) மண்ணிற்கு பொட்டாசியம் அயனை சேர்ப்பதற்கு

www.lkedu.lk

5) மண்ணிற்கு அசேதன அயன்களின் அளவை அதிகரிப்பதற்கு

20) சோளப் பயிர்ச் செய்கையின் நாற்றுப் பருவத்தின் பயிர்க் குணகம் 0.9 ஆகும். ஒருவார காலத்தில் ஆவியாதல் 42cm ஆகும். ஆவியாதல் தட்டின் குணகம் 0.5 ஆயின் சோள நாற்றின் நாளொன்றிற்கான நீர்த் தேவை

1) 0.9cm 2) 2.7 cm 3) 4.5 cm 4) 18.9 cm 5) 21 cm

21) மேற்பரப்பு நீர்பாசனத்தின் போது ஊடுவடிதல் நிகழும் அவத்தை

1) முன்னவத்தை 2) ஈரமாதல் அவத்தை 3) தேய்வு அவத்தை
4) பின் அவத்தை 5) ஈற்றவத்தை

22) pF பெறுமானம் பிரதிநிதித்துவப்படுத்துவது

1) மண்ணின் மொத்த அமிலத் தன்மையை
2) மண்ணின் மாற்றீடு செய்யத்தக்க அமிலத் தன்மையை
3) மண் நீருடன் பிணைக்கப்பட்டுள்ள சக்தியை
4) மண் கரைசலின் H^+ செறிவை
5) மண்ணிலுள்ள நுண்ணங்கிகளின் உயிர் திணிவை

23) இலங்கைக்கு தென்மேல் பருவப் பெயர்ச்சி மழை கிடைக்கும் காலப்பகுதி,

1) மார்ச் - மே 2) மே - செப்ரெம்பர் 3) செம்ரெம்பர் - டிசம்பர்
4) டிசம்பர் - மார்ச் 5) நவம்பர் - பெப்ரவரி

24) பயிர் நிலத்தின் சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

A. துண்டுகளைத் தன்மை B. உண்மை அடர்த்தி
C. தோற்ற அடர்த்தி D. மண் இழையமைப்பு

நிலம் பண்படுத்தலினால் மாற்றமடையக்கூடிய மண்ணின் பௌதீக இயல்புகள்,

1) A, B மட்டும் 2) A, C மட்டும் 3) C, D மட்டும்
4) A, B, C மட்டும் 5) A, B, D மட்டும்

25) நாற்றுமேடைக்காக தெரிவு செய்யப்படும் நிலம் கொண்டிருக்க வேண்டிய இயல்புகள்,

1) சாய்வான, நீர்வடிப்புள்ள நிலம் 2) சமதரையான, நீர்வடிப்புள்ள நிலம்
3) சாய்வான, சூரிய ஒளிபடும் நிலம் 4) நீர்வசதி கொண்ட, சாய்வான நிலம்
5) மண்ணரிப்பிற்கு உட்படாத, நீர்வடிப்பற்ற நிலம்

26) ஊடுபுகவிடும் தன்மை குறைவான, சீரான இழையமைப்பைக் கொண்ட ஆழம் குறைவான மண்ணை உடைய பயிர் நிலத்திற்கு பொருத்தமான நீர்பாசன முறை,

1) வெள்ளப்படுத்தல் 2) வரம்புசால் 3) மோதிர வடிவ நீர்ப்பாசனம்
4) நிரல் நீர்பாசனம் 5) துளைகள் கொண்ட குழாய்

27) வளிமண்டல அவதான நிலையத்தில் தினமும் இரண்டு தடவைகள் தரவு பெறும் சாராமாறி,

1) உயர்வு வெப்பநிலை 2) ஈரப்பதன் 3) சூரிய பிரகாச மணித்தியாலங்கள்
4) காற்றின் வேகம் 5) மழைவீழ்ச்சி

28) மண்ணீர்க் கொள்ளளவில் செல்வாக்குச் செலுத்தும் நீரின் இயல்பாக அமையாதது,

1) சர்வதேச கரைப்பான் 2) மயிர்த்துளைக் கவர்ச்சி விசை

www.keau.lk

3) பிணைவு விசையும் ஒட்டற் பண்பு விசையும்

4) மேற்பரப்பிழுவை 5) முனைவுத் தன்மை

29) மண்ணில் காணப்படும் இடைத்தர அங்கிகளை மட்டும் உள்ளடக்குவது,

1) மண்புழு, நத்தை 2) இலைக்கன், சிற்றுண்ணி

3) பற்றீரியா, சயனோ பற்றீரியா 4) பங்கசு, புரட்டசோவா

5) சிற்றுண்ணி, எறும்பு

30) பின்வருவன மண் தொடர்பான கூற்றுக்களாகும்.

A - குவாட்ஸ் படிகம், பெல்ஸ்பார், மைக்கா போன்ற கனியத் துணிக்கைகள் மண்ணில் மணலாகவும், அடையலாகவும் காணப்படும்

B - வானிலையாலழிதலின் போது உயர்வெப்ப அமுக்க நிபந்தனைகளின் கீழ் O_2 இல்லாத நிலையில் நிகழும் தாழ்த்தல் தாக்கத்தின் விளைவாக முதலான கனியத்துணிக்கைகள் உருவாகும்.

மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களில்,

1) A சரியானது 2) B சரியானது

3) A, B ஆகிய கூற்றுக்கள் இரண்டும் சரியானவை

4) A சரியானதாக அமைவதுடன் B யின் மூலம் அது சரியாக விளக்கப்படும்

5) B சரியானதாக அமைவதுடன் A யின் மூலம் அது சரியாக விளக்கப்படும்

31) நீருயர்த்தல் தொடர்பான கீழ்வரும் கூற்றுக்களை கருதுக.

A - ஆழமான கிணற்றிலிருந்து நீரைப் பம்புவதற்கு விசேட உபகரணத் தொகுதி பயன்படுத்தப்படும்.

B - சாதாரண பம்பியின் உறுஞ்சல் நிரல் $7.5m$ ஆகும்.

மேற்படி கூற்றுக்கள் தொடர்பாக

1) A சரி B தவறு 2) B சரி A தவறு 3) A, B சரியானவை

4) A, B சரியானவை, யு யினால் டீ மேலும் தெளிவாகின்றது.

5) A, B சரியானவை, B யினால் A மேலும் தெளிவாகின்றது.

32) நுண்நீர்பாசனம் தொடர்பாக தவறான கூற்று

1) நுண் நீர்ப்பாசனம் மேற்கொள்வதற்கு முசல வகை நீர்பம்பிகள் அவசியம்.
2) எல்லாத் தாவரங்களிற்கும் தூவல் நீர்பாசனம் பொருத்தமற்றதாக காணப்படும்.
3) துளி நீர்ப்பாசனத்தில் பயிரின் வேர் வலயத்தில் துளித்துளியாக நீர் வழங்கப்படும்.
4) நுண் நீர்பாசனத்தில் நீர் வினைத்திறனாக பயன்படுத்தப்படுகின்றது.
5) நுண் நீர்பாசனம் மேற்கொள்வதற்கு முதலீட்டுச் செலவு அதிகம்

33) குளத்தின் மிகையான நீர்க்கொள்ளளவு காரணமாக குளக்கட்டில் ஏற்படுத்தப்படும் அழுக்கத்தை குறைப்பதற்கான அமைப்பு

1) குள அடிவரம்பு 2) நீர்மட்டக்கல் 3) கலிங்கத் தொட்டி

4) அலைதாங்கி 5) மேல்மடை

34) நாற்றுப் பருவத்திலுள்ள கத்தரிப் பயிரின் பயிர்க்குணகம் 0.7 ஆகும். மாட்டேற்று ஆவியாதலாவீயுயிர்ப்பு $8cm$ எனில் ஒரு வாரத்தில் பயிரின் ஆவியாதலாவியுயிர்ப்பு,

1) 4.9 cm 2) 5.6 cm 3) 39.2 cm 4) 392 cm 5) 56 cm

35)மண்ணீர்க் கொள்ளளவு உச்சப் பெறுமானத்தை அடையும் சந்தர்ப்பம்

1) நிரம்பல் நிலை 2) வயற்கொள்ளளவு நிலை 3) பருகுநீர்

4) புவியீர்ப்பு நீர் 5) தற்காலிக வாடல்நிலை

36) பின்வருவன மட்காப்பு நடவடிக்கைகளாகும்.

A - மண்ணிற்கு ஜிப்சம் இடுதல்
B - மூடுபடையிடல்
C - நிலத்தைப் பொருத்தமான முறையில் பண்படுத்தல்.
D - கல்வேலி அமைத்தல்

மேற்குறிப்பிட்டவற்றுள் மண்ணரிப்பைத் தடைசெய்வதற்கு பயன்படுத்தப்படும் முறைகள்

1) A, B மட்டும் 2) B, C மட்டும் 3) C, D மட்டும்

4) A, B, C மட்டும் 5) B, C, D மட்டும்

37) நீர்ப்பாசன வினைத்திறன் மிகக் குறைந்த மேற்பரப்பு நீர்ப்பாசன முறை,

1) வெள்ளப்படுத்தல் 2) நிரல்முறை 3) பாத்தி முறை

4) குடநீர்ப்பாசனம் 5) நுண் நீர்ப்பாசனம்

38) பைருவிக் அமிலத்தின் காற்றின்றிய ஒட்சியேற்றம் காரணமாக உருவாகும் விளைபொருட்கள்

1) ஒட்சிசன், ATP 2) ATP,$NADH_2$ 3) $FADH_2$,$NADH_2$

4) மெதனோல், ஒட்சிசன் 5) எதனோல், CO_2

39) இலங்கையின் உலர் வலயத்தில் பொதுவாகக் காணப்படும் செங்கபில வகை மண் அழைக்கப்படுவது($USDA$)இ

1) $Tropaqualfs$ 2) $Haplustalfs$ 3) $Rnodustalf$

4) $Calsic\ Brown\ soil$ 5) $Redisn\ brown\ soil$

40) கமநல சேவை திணைக்களத்தினால் விவசாயத்திற்கு ஆற்றப்படும் சேவை / செயற்பாடாக **அமையாதது,**

1) விவசாய உள்ளீடுகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்
2) சிறு நீர்பாசன திட்டங்களை புனரமைப்புச் செய்தல்
3) விவசாய விளைச்சல்களை சந்தைப்படுத்தி நியாயமான விலைகளை பெற்றுத்தரல்
4) விவசாய காணி இடாப்பை தொடர்ச்சியாக பேணுதல்
5) காலநிலைக்கேற்ப நாட்டப்பட வேண்டிய பயிர்களை விவசாயிகளிற்கு சிபாரிசு செய்தல்

41) ஈர, உலர் வெப்பமானி தொடர்பாக பின்வருவனவற்றில் சரியானது,

1) ஈர வெப்பமானியில் பாத இரசமும் உலர் வெப்பமானியில் அற்கோலும் அளவிடும் திரவமாக பயன்படும்.
2) எந்த சந்தர்ப்பத்திலும் ஈர, உலர் வெப்பமானியின் வாசிப்புகள் சமனாக அமையாது.
3) சாரீரப்பதன் அதிகரிக்கும் போது நிச்சயமாக ஈர, உலர் வெப்பமானியின் வாசிப்புக்களிற் கிடையேயான வித்தியாசம் உயர்வடையும்.
4) நாளொன்றில் வாசிப்பைப் பெற்ற பின் வெப்பமானியை மீண்டும் செப்பம் செய்தல் அவசியமில்லை
5) இதனை பயன்படுத்தி அந்நாளின் உயர்வு வெப்பநிலை, சாரீரப்பதன் வளிமண்டல வெப்பநிலை கணிக்க முடியும்

www.lkedu.lk

42) தாவரத்தின் வேர் விருத்தியிலும் பரம்பலிலும் அதிக செல்வாக்கை உடைய மண் காரணி,

1) மண் ஈரலிப்பு 2) மண்ணின் தோற்ற அடர்த்தி 3)மண் வெப்பநிலை
4) மண் மூல நிரம்பல் சதவீதம் 5) மண்ணிறம்

43) வயற் கொள்ளளவு என்பதால் விளக்கப்படுவது,

1) நன்மண் கொண்ட வயல் நிலத்தினால் உச்சமாகப் பற்றிக் கொள்ளக்கூடிய நீரின் அளவு
2) பருகுநீர் மற்றும் புவியீர்ப்பு கீழ் வடிந்தோடிய நீரின் உள்ளடக்கம்
3) மண்ணீரில் தாவரத்தினால் அகத்துறிஞ்சப்படக்கூடிய மயிர்த்துளை நீர்
4) முற்றாக நிரம்பல் நிலையிலுள்ள மண்ணிலிருந்து புவியீர்ப்பு நீரை வெளியேற்றிய பின்னரான எஞ்சிய நீர்
5) குறிப்பிட்ட பயிர் கொண்ட நிலத்திலுள்ள தாவர போசணையின் அளவு

44) மண்ணில் பீடைநாசினிகள் படிப்படியாக உடைக்கப்படுவது

1) தரை நீரினால் 2) மண் புழுக்களினால் 3) பற்றீரியா, பங்கசுக்களினால்
4) மண் கூழ்நிலைத் துணிக்கைகளினால் 5) சேதனப் பொருட்களினால்

45) விவசாயி ஒருவர் பயிர்நிலத்திற்கு அசேதன பசளைகளை விடுத்து சேதனப்பசளையை பயன்படுத்துவாராயின் அம்மண்ணில் ஏற்படக்கூடிய மாற்றம்,

1) மண்ணிற்கு கூடிய நைதரசன் பசளை வழங்கப்படும்.
2) தாவரப் போசணைகள் இலகுவாகவும் உறிஞ்சப்படக்கூடிய வடிவில் மாற்றமடைதல்.
3) மண்ணின் pH ஆனது 7 இற்கு அதிகரித்தல்.
4) மண்நுண்ணங்கிகள் பெருக்கமடைதல், நீர் பற்றும் திறன் மேம்படல்.
5) குறைந்தளவு பசளையில் கூடியளவான போசணைப் பொருட்கள் அடங்குதல்.

46) காலநிலை மாற்றத்தை வெற்றி கொள்ளக்கூடிய வகையில் விவசாயத் திட்டமிடல் மேற்கொள்ளல் அவசியம். பின்வருவனவற்றில் காலநிலை மாற்றத்தின் விளைவாக அமையாதது,

1) மழைவீழ்ச்சிக் கோலத்தில் மாற்றம் 2) வெள்ளப்பெருக்கு அபாயம்
3) கடல் நீர்மட்டம் உயருதல் 4) ஓசோன்படை தேய்வு
5) பச்சை வீட்டு விளைவால் புவி வெப்பம் அடைதல்

47) பசளை பை ஒன்றில் "23−19−17" எனக் குறிப்பிடப்பட்டிருந்தால்,

1) 25% N , 19% P_2O_5,17% K_2O ஆகியவற்றைக் கொண்டது.
2) 23% N,19% K ,17% P ஆகியவற்றைக் கொண்டது.
3) தாவர நைதரசனை 23% உம் பொட்டாசியம் 19% உம் பொசுபரசு 17% உம் வழங்கும்.
4) 100 kg உரத்தில் 19 kg பொசுபரசு காணப்படுகின்றது.
5) 23% NH_4 வடிவமும் 19% PO_4^{2-} ,17% K^+ அயன் வடிவங்களில் காணப்படுகின்றது.

48) இழிவுப் பண்படுத்தலில் பயன்படுத்தக்கூடிய உபகரணம்

1) வட்டத்தட்டுக் கலப்பை 2) மண்வெட்டி 3) சாலிடு கருவி
4) வட்டத்தட்டு ஹரோ 5) ஹோவகை உபகரணங்கள்

49) பின்வருவனவற்றில் மண் வளங்குன்றலிற்கு காரணமான நடவடிக்கையாக அமையாதது

1) சேறடித்தல் முறை மூலம் பயிர் செய் நிலத்தை பண்படுத்தல்
2) ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாவரங்களை குறிப்பிட்ட நிலத்தில் மாறி மாறிப் பயிரிடல்
3) சாய்வான பகுதிகளில் உச்சப் பண்படுத்தலை மேற்கொண்டு பயிர் செய்தல்
4) உவர் தன்மை கூடிய மண்ணில் நீரை தேக்கி வடியவிடல்
5) மண்ணிற்கு சேதனப் பசளைகளை விட அசேதன பசளைகளை கூடிய அளவில் பிரயோகித்தல்

50) ஆட்டீசியன் நீரேந்தி தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - ஆட்டீசியன் கிணறுகளில் நீர் ஒருபோதும் வற்ற மாட்டாது.

B - ஊடுபுகவிடாத பாறைப்படைகளிற்கிடையில் நீர் காணப்படுவதால் இந்நீர் உயர் அமுக்கத்தில் காணப்படும்.

C - ஊடுபுகவிடாத பாறைப் படுக்கைகளிடையே நீர் செல்வதற்கு காரணம் அவற்றின் வாய் மலைப் பாறைகளின் நீர்தாங்கு பகுதிகளில் காணப்படுதல்

தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானது அல்லது சரியானவை,

1) A மட்டும் 2) B மட்டும் 3) A, B மட்டும்
4) B, C மட்டும் 5) A, B, C எல்லாம்

www.kcu.lk